இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 109 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 13 – சனிக்கிழமை 29 நவம்பர் 2025 – மதுரை 12 + 20 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 109: Thiruvalluvar Year - 2056 - Karthigai 13- Saturday 29 November 2025 - Madurai 12 + 20 Pages ₹ 5.00




சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று (28.11.2025) நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நடிகர் சிவகுமார் அவர்களுக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி, சிறப்பித்தார். இவ்விழாவில், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று (28.11.2025) நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், குருசாமி சந்திரசேகரன் (எ) ஓவியர் சந்ரு அவர்களுக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி, சிறப்பித்தார். இவ்விழாவில், அமைச்சர்கள், மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி. கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு எப்படி, உற்பத்தி - பொருளாதாரம் - தொழில்நுட்ப அறிவு அவசியமோ, அதே அளவுக்கு

# சமூகத்தின் சிந்தனை வளத்திற்கு கலைகளின் வளர்ச்சியும் அவசியம்!

## இசை - கவின்கலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ.29-**

**முதலமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றுகையில், “ ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு எப்படி, உற்பத்தி - பொருளாதாரம் - தொழில்நுட்ப அறிவு அவசியமோ, அதே அளவுக்கு, சமூகத்தின் சிந்தனை வளத்திற்கு கலைகளின் வளர்ச்சியும் அவசியம்” என்று குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

**அதிக பெண்கள் பட்டம் பெற்றிருப்பது கூடுதல் மகிழ்ச்சி!**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தில் படித்து, பட்டம் பெறும் உங்களை மாணவ, மாணவியர் என்று சொல்வதைவிட பட்டம் பெற்ற கலைஞர்கள் என்று அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்! அந்த வகையில், பல்வேறு துறைகளில் மிளிரப் போகும் கலைஞர்களுக்கு என்னுடைய உளம் கனிந்த வாழ்த்துகள்! அதிலும், அதிக பெண்கள் பட்டம் பெற்றிருப்பது கூடுதல் மகிழ்ச்சியை எனக்கு ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த பட்டமளிப்பு விழாவிற்கு முதலமைச்சராக, பல்கலைக்கழக வேந்தராக மட்டுமல்ல, நானும் நாடகம் மற்றும் திரைத்துறையில் இயங்கும் கலைஞன் என்ற அந்த முறையில் இங்கு வந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதிலும், நம்முடைய மதிப்பிற்குரிய அண்ணன் சிவக்குமார் அவர்களுக்கும் - மதிப்பிற்குரிய ஓவியர் சந்துரு அவர்களுக்கும் ‘மதிப்புறு முனைவர்’ பட்டம் வழங்குவதில் நான் பெருமை அடைகிறேன்.

அதிலும், பல்துறை வித்தகரான அண்ணன் சிவக்குமார் அவர்களுக்கு இந்த டாக்டர் பட்டம் மிக மிகப் பொருத்தமான ஒன்று! அண்ணன் சிவக்குமார் அவர்கள், புகழ்பெற்ற நடிகர் மட்டுமல்ல; நல்ல ஓவியர்! சிறந்த சொற்பொழிவாளர்! முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நெருக்கமானவர்! தலைவரே அவரது வீட்டிற்குச் சென்று, ஒன்றரை மணி நேரம் அவரது ஓவியங்களைப் பார்த்து ரசித்து இருக்கிறார்! அதேபோல், எல்லா முதலமைச்சருடனும் பழகியவர் நம்முடைய சிவக்குமார் அவர்கள்! எம்.ஜி. ஆருக்கு நெருக்கமானவர்!

**எனக்கும் அண்ணனாக இருக்கிறார் நடிகர் சிவக்குமார்!**

இந்தப் பல்கலைக்கழகம் பெயர் பெற்றிருக்கக்கூடிய அம்மையார்



தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி, விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### ‘தித்வா’ புயல் காரணமாக கனமழையை எதிர்கொண்டு

# மக்களுக்கு உதவிட தயார் நிலையில் இருக்கவும்!

## கழக நிர்வாகிகள் - மக்கள் பிரதிநிதிகளுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, நவ. 29 -**

**காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக மக்கள் பிரதிநிதிகள் “தித்வா” புயல் காரணமாக கனமழையை எதிர்கொண்டு மக்களுக்கு உதவிட தயார் நிலையில் இருக்கவும்! என முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள கடந்த இரண்டு நாட்களாக பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளுடன் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வந்த நிலையில், “தித்வா புயல்” எதிர்கொள்ள அரசின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டுள்ளதோடு, மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மழையை எதிர்கொள்ள அரசாங்கம் முழு அளவில் தயாராக உள்ளது என்றாலும், ஒருவேளை இயற்கை வழக்கத்திற்கு மாறாகப் பெருமழைப்பொழிவை ஏற்படுத்தினாலும் சரியான முன்னெச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் மழைக் காலத்தை எதிர்கொள்வோம். பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையில் கழகமும் களத்தில் துணையாக நிற்க வேண்டும் என கழக உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களைத் தயார் நிலையில் இருக்கும்படி காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல் வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும். கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளிலேயே முழு மையாக இருந்து மக்களுக்கு உதவிட வேண்டும்.

மழைக்காலத்தில் கழகத்தினர், பொதுமக்கள் தன்னார்வலர்களுடன் இணைந்து பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வாங்கித் தருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொள்வது அவசியம். குடிநீர், பால் ஆகிய இரண்டும் மிக அவசியமான தேவையாக இருக்கும். எனவே தங்கள் பகுதிகளில் அவை தடையின்றிக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணித்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்து தரவும், ஆங்காங்கே நடைபெறும் மீட்பு பணிகளிலும் உதவிடவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்காலத்தை எதிர்கொள்ளவும் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையிலும் கழகம் களத்தில் முழுமூச்சுடன் துணையாக நிற்க வேண்டும் என கழக உடன்பிறப்புகளையும் நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.